# இந்திய மத்திய அரசை நம்பியுள்ளோம் மனோ கணேசன் எம்.பி. வேண்டுகோள்



மலையகத்தில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, தாதியர் கல்லூரி, பல்கலைக்கழகம் போன்றவை அமைய இந்தியா உதவிட வேண்டும் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம். பி. கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

கொழும்பு அவிசாவளை முதல் நுவரெலியா வரை நாடெங்கும் பரந்துவாழும், இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மலையகத் தமிழரின் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழில்நுட்ப பயிற்சி ஆகியவை தொடர்பாக இந்திய மத்திய அரசு உதவிட உத்தரவாதம் தரவேண்டும். மலையகம் - 200 நினைவுறுத்தல் தொடர்பாக இந்தியாவின் பங்களிப்பு இந்த அடிப்படைகளில் அமையவேண்டும்.

இவ்வருட ஆரம்பத்திலேயே நாம் இந்தியத் தூதுவர் கோபால் பாகலேயிடம், மலையகம் - 200 நினைவுறுத்தல் நிகழ்வுகள் தொடர்பில் உரையாடி எழுத்து மூல கோரிக்கையும் விடுத்துள்ளோம். இலங்கை வந்து சென்ற இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரிடமும் உரையாடியுள்ளோம்.

இந்த நிலையில், அடுத்தவாரம், 2➤

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 29 வெள்ளிக்கிழமை 14.07.2023 கதிர் 27

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV YouTube தளம்



## மருத்துவர்களின் ஓய்வு வயதை நீடிக்க ஜனாதிபதி உத்தரவு

மருத்துவர்களின் ஓய்வுபெறும் வயதை 2024 ஆம் ஆண்டின் இறுதிவரை 63 ஆக நீடிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுகாதார அமைச்சர் மற்றும் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதேவேளை, அமைச்சின் தேவைக்கேற்ப ஏனைய விசேட சந்தர்ப்பங்களுக்கும் இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்படும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட உபகுழு சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

# சுகாதார அமைச்சர் கெஹலிய உடனே பதவி விலக வேண்டும்!

### விமல் வீரவன்ச வலியுறுத்து



சுகாதாரத்துறை மீதான நம்பிக்கையைக் கேள்விக்குறியாகியுள்ள சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோர் உடன் பதவி விலக வேண்டும், என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச வலியுறுத்தியுள்ளார்.

பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீண்டுவிட்டோம், என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அமைச்சரவை உறுப்பினர்கள் குறிப்பிட்டுக்கொள்கின்றார்கள். ஆனால், நடைமுறையில் நிலைமை எதிர்மறையாக உள்ளது. பொருளாதாரப் பாதிப்பின் ஒட்டுமொத்த சுமையும் நடுத்தர மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இலவச சுகாதார சேவை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. மருந்துத் தட்டுப்பாட்டு நெருக்கடி தோற்றம் பெற்றவுடன், அவசர கொள்வனவு முறையில் திறந்த விலை மனுக்கோரல் இல்லாமல் மருந்துப் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

இந்தியாவில் இருந்து அவசர கொள்வனவு முறையில் இறக்குமதி செய்யப்பட்ட மருந்துகளின் தரம் தொடர்பில் பாரிய சர்ச்சை தோற்றம் பெற்றுள்ளது. மருந்துத் தட்டுப்பாடு மற்றும் தரமற்ற மருந்துக் கொள்வனவு தொடர்பில் சுகாதாரத்துறை அமைச்சர் சிறுபிள்ளை போல் கருத்துரைக்கின்றார், என்று அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

## கெஹலியவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வர நடவடிக்கை

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டு வருவது குறித்து ஐக்கிய மக்கள் சக்தி ஆலோசித்து வருவதாக கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

நாங்கள் இந்த நடவடிக்கை குறித்து ஆலோசித்து வருகிறோம், இந்த விஷயத்தில் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை, என்றும் அவர் கூறியிருக்கிறார்.

மருந்துகளை கொள்வனவு செய்தமை மற்றும் முறைகேட்டில் ஈடுபட்டதாக கூறப்படும் விடயங்கள் தொடர்பாக அமைச்சர் ரம்புக்வெல, பல விமர்சனங்களை எதிர்கொண்டுள்ளார். மருத்துவ அலட்சியத்தைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் அவர் விமர்சிக்கப்பட்டுள்ளார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டவுடன், சபையின் அலுவல்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் எனவும் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

## வேலைவாய்ப்பற்ற இளைஞர் யுவதிகளுக்கு சுற்றுலா பணியகத்தின் இலவச பயிற்சிகள்

வடமாகாண சுற்றுலாப் பணியகத்தினால், வடமாகாணத்தில் வேலை வாய்ப்பற்று இருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு விருந்தோம்பல் முகாமைத்துவப் பயிற்சிகளை கட்டணமின்றி வழங்கும் நோக்கத்துடன் செயற்றிட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, எதிர்வரும் காலங்களில் விருந்தோம்பல் முகாமைத்துவப் பயிற்சிகளை வழங்கும் அரச உயர் கல்வி நிறுவனமான ளுடுஜஎவுஉஆ உடன் இணைந்து, வரவேற்பறை முகாமைத்துவம் மற்றும் சமையற்கலை போன்ற துறைகளில் 3 மாதப் பயிற்சிகளை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பயிற்சி நெறிக்கு, வருமானம் குறைந்த குடும்பங்களிலிருந்து வருபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளதோடு, ஆர்வமுள்ளவர்கள் தங்களது பெயர் விபரங்கள் மற்றும் கல்வித் தகைமை என்பவற்றைப் பூரணப்படுத்தி வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக tourismnorth.srilanka@gmail.com எனும் மின்னஞ்சலுக்கு அல்லது சுற்றுலாப் பணியகம், வடமாகாணம், ஏ9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம் 2➤

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 37 ஆவது பட்டமளிப்பு விழா - 2023



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 37ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் முதலாவது பகுதி, எதிர்வரும் 19, 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் சந்திப்பொன்று, இன்று காலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது.

இந்தப் பட்டமளிப்பு விழாவில் 162 பட்டப்பின் தகைமை பெற்றவர்களுக்கும், 1885 உள்வாரி மாணவர்களுக்கும், 166 வெளிவாரி மாணவர்களுக்கும் பட்டங்கள் வழங்கப்பட இருப்பதுடன், 65 உயர் தகைமை மற்றும் தகைமைச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

பட்டமளிப்பு நிகழ்வுகளை நேரலையாக பல்கலைக் கழகத்தின் யூரியூப் மற்றும் முகப்புத்தகப் 2➤

இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரேயொரு மாலை இதழ்

# சங்கிலியன் தோரண வாயில் ஞாயிற்றுக்கிழமை திறப்பு

நல்லூர் இராசதானியின் சங்கிலியன் தோரண வாயில் புனரமைப்பு பணிகள் நிறைவு பெற்ற நிலையில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணியளவில் திறப்பு விழா இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவர் பேராசிரியர் பரமு புஸ்பரட்ணத்தின் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரனும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன், சிவபூமி அறக்கட்டளை நிறுவுனர் ஆறு திருமுருகன், தொல்பொருள் திணைக்கள யாழ்ப்பாண உதவிப் பணிப்பாளர் யு.ஏ.பந்துலஜீவவும் கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன், நல்லூர் பிரதேச செயலாளர் அ.எழிலரசி, யாழ்ப்பாண மாநகர முன்னாள் முதல்வர் வி.மணிவண்ணன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நல்லூர் இராசதானியின் சங்கிலியன் தோரண வாயில் திறப்பு விழாவை தொடர்ந்து மந்திரிமனை அரங்கில் நிகழ்வுகளும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

மரபுரிமைச் சின்னங்கள் அழிந்து போகாமல் அவற்றைப் பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்கு அந்த மரபுரிமைச் சின்னங்களை ஒப்படைக்க வேண்டிய தார்மீகக் கடமையுடன் உருவாக்கப்பட்ட யாழ்ப்பாணம் மரபுரிமை மையத்தினால் (JAFFNA HERITAGE CENTER) முன்னெடுக்கப்பட்ட முதலாவது செயற்றிட்டம் இதுவாகும்

# எல்லை மீறி இரண்டாவது தடவையும் பிடிபட்ட இந்திய மீனவருக்கு விடுதலை

கடந்த ஆண்டு கைதாகி ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையில் விடுவிக்கப்பட்ட இந்திய மீனவர் ஒருவர், இந்த ஆண்டு மீண்டும் கைதாகி, ஊர்காவற்றுறை நீதிமன்றால் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தார். தற்போது அவர், யாழ். மேல் நீதிமன்றால் தண்டனைக் காலம் குறைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் இலங்கைக் கடற்பரப்புக்கள் அத்துமீறி மீன்பிடித்தமை உள்ளிட்ட 3 குற்றச்சாட்டுக்களில் இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களுக்கு 5 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு 6 மாத கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

அவர்களில் ஒரு மீனவர் மீண்டும் இந்த ஆண்டு மார்ச் மாதம் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவர் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது, ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையில் விதிக்கப்பட்ட, இரண்டு 6 மாத கால சிறைத்தண்டனையையும் ஏக காலத்தில் அனுபவிக்க வேண்டும் என்றும், மீளவும் அத்துமீறிய குற்றத்துக்காக மேலதிகமாக 8 மாத சிறைத்தண்டனையுமாக 14 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இதையடுத்து, அந்த இந்திய மீனவரால் யாழ். மேல் நீதிமன்றில் மேன்முறையீடு செய்யப்பட்டது. அந்த வழக்கின் விசாரணையடுத்து அவருக்கு 3 மாதகாலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அவர் கடந்த மார்ச் மாதம் கைதானதிலிருந்து தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த 5ஆம் திகதி விடுவிக்கப்பட்டுள்ளார்.

# 10 கிலோ கேரள கஞ்சாவுடன் சிக்கிய கடற்படைச் சிப்பாய்!

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணப் பையில் 10 கிலோ கேரள கஞ்சாவை கடத்திச்சென்ற கடற்படைச் சிப்பாய் ஒருவர் வவுனியா நகரில் வைத்து இன்று அதிகாலை கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர், யாழ்ப்பாணத்தில் இருந்து கேரள கஞ்சாவை பஸ்ஸில் கொண்டு வருவதாக வவுனியா தலைமையகப் பொலிஸ் பரிசோதகருக்குக் கிடைத்த தகவலையடுத்து பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் பஸ்ஸை நிறுத்திச் சோதனையிட்டபோது சந்தேகநபரிடம் இருந்து பொதிகள் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்படும்போது சந்தேகநபரிடம் தலா இரண்டு கிலோ எடையுள்ள 5 கேரள கஞ்சாப் பொதிகள் இருந்தன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# புளியம்பக்கனை நாகதம்பிரான் ஆலய புதிய நிர்வாகத்தினர் தெரிவு இன்று



வரலாற்றுச் சிறப்புமிக்க கரைச்சி புளியம்பக்கனை நாகதம்பிரான் ஆலய புதிய நிர்வாகத் தெரிவு கலந்துரையாடல் இன்றைய தினம் கண்டாவளை பிரதேச செயலாளரின் தலைமையில் ஆலய முன்றலில் நடைபெற்றது. இக் கலந்துரையாடலில் ஏகமனதாக முன்னைய தலைவர் செயலாளர் பொருளாளர்களே மீண்டும் தெரிவுசெய்யப்பட்டனர்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பக்கங்களினூடாகவும், பல்கலைக் கழகத்தின் இணையத்தளம் வாயிலாகவும் பார்வையிட முடியும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டு 50 ஆவது வருடத்தில் நடைபெறவுள்ள பொன்விழா நிகழ்வுகளின் ஆரம்ப நிகழ்வாக இப்பட்டமளிப்பு விழா இடம்பெறவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## வேலைவாய்ப்பற்ற இளைஞர் யுவதிகளுக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனும் முகவரிக்கு கடிதம் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

மேலதிக தகவல்களுக்கு 077 794 750 அல்லது 021 221 7311 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளமுடியும்.

## இந்திய மத்திய அரசை ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியா செல்லும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம், இவை தொடர்பில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நல்லெண்ண உத்தரவாதங்கள் அளிப்பார் என நாம் நம்புகின்றோம்.

கல்வி மற்றும் சமூக அபிவிருத்தி தொடர்பாக இந்திய மத்திய அரசை நாம் நம்பி உள்ளோம். குறிப்பாக, நாடெங்கும் பரந்து வாழும், இந்திய வம்சாவளி மலையகத் தமிழர் பிள்ளைகளின் பாடசாலைகளில் விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்கள் இல்லை.

இந்தப் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களை பயிற்றுவிக்க, விசேட வேலைத்திட்டம் தேவை. அதேபோல், தேயிலை, இறப்பர் மலைகளில் அல்லலுறும் எங்கள் பெண்களின் வெளிநாட்டு, உள்நாட்டு வேலை வாய்ப்புகளை உறுதிப்படுத்த தாதியர் பயிற்சிக் கல்லூரி அவசியம். உயர் கல்வி மற்றும் தொழில்நுட்ப கல்வியை அடிப்படையாகக் கொண்டு ஒரு முதற்கட்ட பல்கலைக்கழக கல்லூரி ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இவை அனைத்தும் இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்களுக்கான விசேட சமூக அபிவிருத்தி திட்டங்களாக முன்னெடுக்கப்பட வேண்டும். மத்திய, மேல், சப்ரகமுவா, ஊவா, தென் மாகாணங்களில் வாழும் நமது மக்கள் தொடர்பில் தமக்குள்ள தார்மீகக் கட்டுப்பாட்டை இந்திய மத்திய அரசு நிறைவேற்றும் என நாம் நம்புகின்றோம்.

அதேவேளை, இலங்கையில் மலையகத் தமிழரது தேசிய அரசியல் அபிலாஷை கோரிக்கைகள் தொடர்பில் நாம் உள்நாட்டில் இலங்கை அரசுடன் பேசுவோம்.

அதிகாரபூர்வ அரசுத் தரப்பு பேச்சு குழுவை முறைப்படி அமைத்து, அத்தகைய பேச்சுகளை விரைவில் ஆரம்பிக்க இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எம்மிடம் உறுதி அளித்துள்ளார். அந்த உறுதிமொழியை அவர் நிறைவேற்றுவார் என நாம் நம்புகின்றோம், என்று அவரது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.




உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# நெடுந்தீவுப் பிரதேசத்திற்கான பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று நடைபெற்றது

யாழ் நெடுந்தீவுப் பிரதேசத்திற்கான பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமாகிய டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இன்று காலை 9.30 க்கு நெடுந்தீவு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெற்றது.

நெடுந்தீவு பிரதேச செயலாளரின் ஒழுங்குபடுத்தலில் நடைபெறும் கூட்டத்தில், பிரதேசத்தின் கடல் போக்குவரத்து, சுற்றுலாத்துறை உள்ளிட்ட முக்கிய விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

இதன்போது மத்திய மற்றும் மாகாண அமைச்சுக்களினால் மேற்கொள்ளப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்கள், அவற்றின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

துறைரீதியான முன்னேற்ற மீளாய்வில் சேவைத்துறை சார்ந்த முன்னேற்றங்கள், அவற்றின் தீர்வுகள் குறித்தும், பிரதானமாக சுகாதாரம், கல்வி, வீட்டுத்திட்டம், உள்ளூராட்சி, கூட்டுறவு, நீர்வழங்கல், மின்சாரம், போக்குவரத்து, சமுர்த்தி, விவசாயம், நீர்ப்பாசணம், வாழ்வாதாரம், மீன்பிடி, வீதிப்புனரமைப்பு, காணி உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்ந்தும் கலந்துரையாடல்கள் நடைபெற்றுள்ளன.



இதில், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மற்றும் பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், கிராமமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், என பல்வேறு தரப்பினரும் கலந்துகொண்டனர்.

# நெடுந்தீவின் பிரதான போக்குவரத்து நேரம் திடீர் மாற்றம் பொதுமக்கள், சுற்றுலாப் பயணிகள் பெரும் அசௌகரியம்



நெடுந்தீவின் பிரதான போக்குவரத்து மார்க்கமான வடதாரகை பயணிகள் படகுக்கான நேர ஒழுங்கு இன்றைய தினம் தீடீரென மாற்றப்பட்டதால் பொது மக்கள் பலரும் பாதிப்படைந்தனர்.

நெடுந்தீவு பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற நிலையில், அந்தக் கூட்டத்தில் பங்கேற்பவர்களின் வசதிக்கேற்ப வடதாரகை பொதுப்போக்குவரத்தின் நேர ஒழுங்கு மாற்றப்பட்டமையால் நெடுந்தீவுக்கு செல்வதற்காக வழமையான நேரத்திற்கு குறிக்கட்டுவான் வந்த பொதுமக்கள் பலரும் பாதிப்படைந்தனர்.

இதன்போது, நெடுந்தீவுக்குச் செல்ல விருந்த மக்கள், குறிப்பாக, வயோதிபர்கள், வெளிநாட்டுச் சுற்றுலா பயணிகள் எனப் பலரும் பாதிப்படைந்து விசனம் தெரிவித்தனர். குறிக்கட்டுவானிலிருந்து நெடுந்தீவு நோக்கி காலை 8 மணிக்கு பயணமாகும் வடதாரகை பயணிகள் படகு இன்றைய தினம் நெடுந்தீவிலிருந்து குறிக்கட்டுவான் நோக்கி காலை 6.30 மணிக்கும், குறிக் கட்டுவானிலிருந்து நெடுந்தீவு நோக்கி காலை 7.30 மணிக்கும் சேவையில் ஈடுபட்டது.

அரச அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் எனப் பலரும் வடதாரகை படகில் பயணத்தை மேற்கொண்ட நிலையில், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடற்படையினரின் விசேட படகில் பயணத்தார்.

வழமையான பயண நேரமான 8 மணிக்கு வடதாரகை பயணிகள் படகில் பயணிக்க வந்தவர்கள் நீண்ட நேரம் காத்திருந்ததை அவதானிக்க முடிந்தது.

இதன்போது அங்கு ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த முன்னாள் பிரதேச சபை உறுப்பினரொருவர், பொதுமக்களை நடுத்தெருவில் அந்தரிக்க வைத்துவிட்டு யாருக்கு இவர்கள் கூட்டம் நடத்துகிறார்கள்?, என கேள்வி எழுப்பினார்.

சுற்றுலாத் தலமான நெடுந்தீவுக்குச் செல்வதற்காக வந்த தமக்கு, போக்குவரத்து இல்லாமை கவலையளிப்பதாக வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் சிலர் கருத்துத் தெரிவித்தனர்.

பொதுப் போக்குவரத்து நேரங்கள், அதுவும் குறிப்பாக படகுச் சேவை போன்ற மிகக் குறைந்த சேவை நடைபெறும் இடங்களில் மாற்றங்கள் மேற்கொள்வதாயின் பொதுமக்களுக்கு முன்கூட்டியே அறிவிக்கவேண்டியது அதிகாரிகளின் கடமை என்பதை மறந்துவிட்டார்கள் என அங்கிருந்தோர் சுட்டிக்காட்டியிருந்தனர்.



# பிரித்தானிய இள நிலை மருத்துவர்கள் ஊதிய உயர்வைக் கோரி போராட்டம்




பிரித்தானியாவில் ஊதிய உயர்வு குறித்த பேச்சுவார்த்தையில் எதிர்பார்த்த சுமுக முடிவு எட்டப்படாததால், பல்லாயிரக்கணக்கான இளநிலை மருத்துவர்கள் தங்கள் பணியை புறக்கணித்து வேலை நிறுத்தப் போராட்டத்தை தொடங்கியுள்ளனர்.

முதல் கட்டமாக 5 நாள் இப்போராட்டத்தில் அவர்கள் ஈடுபடுவதாக அறிவித்துள்ளனர். இது நீடித்தால் பிரித்தானியாவின் தேசிய சுகாதார சேவை அமைப்பின் வரலாற்றிலேயே ஒரு மிக நீண்ட வேலை நிறுத்தமாக இது அமையும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 7 மணிக்கு தங்கள் வேலை நிறுத்தத்தை தொடங்கிய அவர்கள் 35 வீத ஊதிய உயர்வுக்காகப் போராடுவதாக தெரிவித்திருக்கிறார்கள். இந்த மருத்துவரகள் அனைவரும் மருத்துவப் படிப்பை முடித்து தங்கள் மருத்துவ பணியின் ஆரம்பகட்டத்தில் இருப்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இளநிலை மருத்துவர்களின் இந்த 5 நாள் வெளிநடப்பு, ஆயிரக்கணக்கான நோயாளிகளுக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும், நோயாளிகளின் பாதுகாப்பையும் கேள்விக்குறியாக்கியுள்ளது என்றும் மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, மருத்துவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் குறைந்தபட்சமாக 6 வீத சம்பள உயர்வு வழங்குவது பற்றி விரைவில் முடிவெடுக்கப்படும் என்று பிரித்தானிய அரச தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.

## பிரான்ஸ் நாட்டின் உயரிய விருது மோடிக்கு வழங்கினார் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன்

பிரான்ஸ் நாட்டில் இன்று பாஸ்டில் தினக் கொண்டாட்டம் நடைபெறுகிறது. இதில் இந்தியா சார்பில் முப்படைகளைச் சேர்ந்த ஒரு ராணுவக் குழு பங்கேற்கிறது. இந்த நிகழ்ச்சியில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

இந்த நிலையில், பாரிசில் உள்ள லா சீன் மியூசிகேலுக்குச் சென்ற நரேந்திர மோடி, இந்திய சமூகத்தினரைச் சந்தித்து உரையாற்றினார். அதைத் தொடர்ந்து பிரான்சில் உள்ள எலிசி அரண்மனைக்குச் சென்றார். அங்கு மோடியை பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவல் மக்ரோன் வரவேற்றார்.

இதையடுத்து, அரண்மனையில் இந்தியப் பிரதமர் மோடிக்கு பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் விருந்தளித்து, கிராண்ட் கிராஸ் ஒப் தி லீஜியன் ஒப் ஹொனர் என்ற விருதை வழங்கினார். இராணுவ அல்லது சிவிலியன் கட்டளைகளில் இது மிக உயர்ந்த பிரான்ஸ் அரசின் கௌரவமாகும். இதனைப் பெறும் முதல் இந்தியப் பிரதமர் என்ற பெருமையை மோடி பெற்றுள்ளார்.



இதற்கு முன்னர் இந்த விருதை தென்னாபிரிக்காவின் முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலா, அப்போதைய வேல்ஸ் இளவரசர் சார்ல்ஸ், ஜெர்மனியின் முன்னாள் அதிபர் ஏஞ்சலா மெர்க்கல், ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் பொதுச் செயலர் புட்ரோஸ் பூட்ரோஸ்-காலி உள்ளிட்டோர் பெற்றிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## கொசோவோ நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களுக்கிடையே மோதல்

கொசோவோ நாட்டில் நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வின்போது, ஆளும் கட்சி மற்றும் எதிர்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களுக் கிடையே மோதல் நிலை வெடித்ததையடுத்து, ஒருவரை ஒருவர் தாக்கிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அந்த நாட்டின் வடக்குப் பகுதியில் செர்பிய இனத்தவருக்கிடையிலான பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவருதல் தொடர்பாக, பிரதமர் அல்பின் குர்தி உரையாற்றிக் கொண்டிருந்த போது, எதிர்கட்சி உறுப்பினர் ஒருவர், தான் வைத்திருந்த தண்ணீரை பிரதமர் மீது விசிறியடித்துள்ளார்.

இதனையடுத்து, ஆளும் கட்சி மற்றும் எதிர் கட்சி உறுப்பினர்களுக்கிடையே மோதல் நிலைமை தோன்றியுள்ளது. மோதலின்போது உறுப்பினர் ஒருவருக்கு முகத்தில் காயம் ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து, நாடாளுமன்ற பொலிஸார் வரவழைக்கப்பட்டு அனைவரும் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டனர்.

## அவுஸ்திரேலிய நெடுஞ்சாலையில் சென்ற 6 கார்கள் ஒன்றன்பின் ஒன்றாக மோதி விபத்து - பெண் பலி



அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாகாணத்தின் சிட்னி நகரில் உள்ள நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த கார் திடீரென செலுத்துநரின் கட்டுப்பாட்டை இழந்து முன்னால் சென்ற கார் மீது மோதியது. இதனையடுத்து பின்னால் வந்த வாகனங்களும் அடுத்தடுத்து மோதி விபத்தில் சிக்கின. ஒன்றன்பின் ஒன்றாக மொத்தம் 6 வாகனங்கள் மோதிக் கொண்டன.

இந்தச் சங்கிலித் தொடர் விபத்தில் ஒரு பெண் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார். இருவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதனால், அங்கு சில மணி நேரம் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

## பாகிஸ்தானில் 12 இராணுவ வீரர்கள் பயங்கரவாதிகளால் சுட்டுக்கொலை



பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் பயங்கரவாதிகள் நடமாட்டம் இருப்பதாக உளவுத் துறைக்கு கிடைத்த தகவலையடுத்து, சூப் மற்றும் சோப் பகுதிகளில் இராணுவ வீரர்கள் ரோந்துப் பணியை மேற்கொண்டிருந்தனர். அப்போது, பயங்கரவாதிகள் பதுங்கியிருந்து திடீரெனத் துப்பாக்கி சூடு நடத்தியுள்ளனர். இந்தத் தாக்குதலில் 12 இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டு, 5 பேருக்குக் காயம் ஏற்பட்டதாக பாகிஸ்தான் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்குப் பதிலடியாக பாகிஸ்தான் இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில், 7 பயங்கரவாதிகள் இறந்துள்ளதாக இராணுவத்தரப்பு கூறுகிறது.

பலுசிஸ்தானில் ஒரே நாளில் இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட உச்சபட்ச தாக்குதல் இதுவென்று தெரிவிக்கப்படுகிறது.

## செயற்கை நுண்ணறிவுக் களத்தில் எலான் மஸ்க் எக்ஸ்.ஏஜ. எனும் நிறுவனத்தைத் தொடங்கினார்




உலகின் முதல் நிலைக் கோடீசுவரரான எலான் மஸ்க், எக்ஸ்.ஏஜ. எனும் செயற்கை நுண்ணறிவு நிறுவனத்தை தொடங்கியுள்ளார். இந்த நிறுவனத்தில் ஓப்பின் ஏஜ, கூகுள் டீப்மைண்ட், டெஸ்லா, மற்றும் டொராண்டோ பல்கலைக்கழகம் ஆகியவற்றின் முன்னாள் ஆராய்ச்சியாளர்கள் பணியாற்றுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏஜ என்பது தொற்றுநோய் மற்றும் அணு ஆயுதப் போருக்கு இணையான ஆபத்து என்று ஆய்வாளர் டொன் ஹென்ட்ரிக்ஸ் முன்னர் எச்சரித்திருந்தார். இவர் தற்போது எக்ஸ்.ஏஜ குழுவிற்கு ஆலோசனைகள் வழங்குபவராக செயற்படுகிறார்.

கடந்த ஏப்ரல் மாதம் ட்ரூத் ஜிபிடி எனும் புதிய செயலிக்கான தனது திட்டங்களைப் பற்றிய விவரங்களை மஸ்க், பகிர்ந்து கொண்டார். மக்களுக்கு மூன்றாவதாக முக்கியதொரு செயலியை உருவாக்குவேன் என நினைப்பதாகவும் அப்போது அவர் கூறியிருந்தார்.

ஓபின் ஏஜ அல்லது கூகுள் டீப்மைண்ட் போன்ற ஒரு ஏஜ நிறுவனத்தைத் தொடங்கி நடத்துவதற்கு ஜிபியு எனப்படும் மிகவும் விலையுயர்ந்த செமிகண்டக்டர்கள் தேவைப்படுவதால், மஸ்கின் இந்த ஏஜ ஆர்வத்தை மிகுந்த பொருட்செலவு தேவைப்படும் ஒரு முயற்சியாக மென்பொருள் நிபுணர்கள் கூறியுள்ளனர்.

## முத்தமிழ் மன்றம் - சௌத்தென்ட்

பெருமகிழ்வுடன் நடாத்தும்

# வருடாந்த மெய்வல்லுநர் போட்டி 2023

இப்போட்டிகளில் பங்கேற்கும் மாணவச் செல்வங்களுக்கு உற்சாகமூட்டவும், அவர்களைத் தட்டிக் கொடுக்கவும், நமது பாரம்பரிய விளையாட்டுகளை கண்டுகளிக்கவும் தங்களை தங்கள் குடும்பத்தாருடன் வருகை தருமாறு அன்புரிமையோடு அழைக்கின்றோம்.

இடம்:

**St. Mary's, Prittlewell, C of E Primary School, Boston Avenue, Southend-On-Sea, SS2 6JH**

நாள்:

**15.07.2023 சனிக்கிழமை**

நேரம்:

**காலை 10:00 மணிமுதல்**

போட்டிகளில் பங்கேற்கவும், மேலதிக தொடர்புகளுக்கும்:

குகன் - 0795 744 1521
ஜோ - 0795 803 8037
செல்வம் - 0799 048 4929
தயா - 0753 569 2693
mmsouthend@gmail.com
www.southendtamils.com

தமிழால் நம் உறவு

தமிழால் நம் உயர்வு




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறுசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.07.2023இல் வெளியிடப்பெற்றது.